**கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம்-2-2016**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டம் -2 இன் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2014 யூன் 03 ஆம் திகதிய 3030-எஜ்ஆர்ஜ-(எஜ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஏ ஆம் உறுப்புரையின் 4.05 ஆம் பிரிவு மற்றும் செயற்திட்ட நிர்வாக கைநூலின் V ஆம் அத்தியாயம் என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி என்பன**

---

கொழும்பு பெரும்பாக நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்ட செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சாகவிருந்த தற்போதைய நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கொழும்பு பெரும்பாக பகுதியில் நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் சேவைகளின் வினைத்திறன் மற்றும் நிதி நிலைபேண் தன்மையை முன்னேற்றுவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்ளாக உள்ளது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 15,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 118 மில்லியனானதுடன் அதில் ரூபா 9,100 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 70 மில்லியன் அல்லது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 59.3 சதவீதம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் சாதாரண மூலதன வளங்களால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டதுடன் ரூபா 2,340 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 18 மில்லியன் அல்லது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 15.3 சதவீதம் ஆசிய அபிவிருத்தி நிதியத்தால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது மிகுதி ரூபா 3,900 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 30 மில்லியன் அல்லது 25.4 சதவீதம் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்புச் செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயத்தில், ரூபா 13,917 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 107.05 மில்லியன் ஒதுக்கீடு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,423 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 10.95 மில்லியன் கொழும்பு மா நகர சபையால் மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளிற்காக செய்யப்பட்டிருந்தது. இந்த அறிக்கையானது தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையால் அமுலாக்கப்பட்ட செயற்திட்டத்தின் நடவடிக்கைகளில் செய்யப்பட்ட அவதானிப்புக்களை கொண்டுள்ளது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2014 செப்தெம்பர் 23 இல் தொடங்கியிருந்ததுடன் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும்

நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயல் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவரின் நிதிகளிலிருந்தான செயற்திட்டத்தின் செலவினம், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ச்சியான அடிப்படையில் காட்டக்கூடியவாறு போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும், உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானது இலங்கை கணக்கீட்டு நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1. அபிப்பிராயம்**

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும் இந்த அறிக்கையின் பந்தி 2.2 இல் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து எழுகின்ற சீராக்கல்களின் தாக்கங்களைத் தவிர்த்தும்,

(அ) செயற்திட்டமானது 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலைவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றது என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்களும் அதற்கான மீள் நிரப்பல்களும் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புக்களுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியாதிருந்ததென்றும்

(உ) எனது முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 10.61 மில்லியன் கூட்டுத் தொகையான பெறுமதி சேர் வரி நடைபெறும் வேலையின் காட்டுவதற்குப் பதிலாக இலங்கை அரசாங்கத்தின் பெறுகைகளிலிருந்து செலுத்தப்பட்டு அவற்றிற்கு எதிராக சரிசெய்யப்பட்டிருந்தது. இதன்விளைவால், ரூபா 92.87 மில்லியன் பெறுமதியான நடைபெறும் வேலைகள் மற்றும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 108.02 தொகையான இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட பங்களிப்பு பெறுகைகள் என்பன் முறையே அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2007 ஆகஸ்ட் 07 ஆந் திகதிய எம்ஔஎவ்பி/ஈஆர்டி/2007/02 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2017 ஏப்ரல் 25 இல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்திட்ட நிர்வாக கைநூலின் 17 ஆம் பிரிவின் பிரகாரம், நிர்மாண காலத்தின் போதான வட்டி மற்றும் ஏனைய கட்டணங்கள் மூலதனமாக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 1.58 மில்லியன் வட்டி மற்றும் ரூபா 15.21 மில்லியன் தொகையான கடப்பாட்டுக் கட்டணங்கள் என்பன செயற்திட்டத்தால் ஏற்பட்ட கிரயங்களாக கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(இ) 1987 இன் 03 ஆம் இலக்க அரச ஒப்பந்த அதிகாரச்சட்டத்தின் 6(1) (அ) ஆம் பிரிவின் பிரகாரம், ரூபா 5 மில்லியன் அல்லது அதற்கு மேலான ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தகாரர்கள் அரச ஒப்பந்த பதிவாளின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். மேலும், கேள்விகள் வழங்கிய பின்னர் 60 நாட்களிற்குள் கேள்வி உடன்படிக்கை அரச ஒப்பந்த பதிவாளருடன் பதிவு செய்யப்படவேண்டும். எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட வேண்டுகைகளுடன் செயற்திட்டத்துடன் ஈடுபட்டுள்ள ஒப்பந்தகாரர்கள் இணங்கியிருக்கவில்லை.

(ஈ) கொழும்பு நகரத்தின் தெற்கு மற்றும் மேற்கின் வருமானமற்ற தண்ணீர் குறைப்பிற்கான முறைமைப் புனரமைப்பின் மாதிரி ஒப்பந்த உடன்படிக்கைகள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 8.9.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு வரிசை அமைச்சு செயலாளருக்குப் பதிலாக தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் தலைவரால் கையொப்பமிடப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கியமான சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒடுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஏடிபீ | 88 | 11,440 | 79.95 | 10,394 | 1,034.00 | 6.70 | 998.30 | 7.11 | 1,058.70 |
| இலங்கை அரசாங்கம் | 30 | 3,900 | 27.10 | 3,523 | 460.41 | 0.63 | 95.00 | 0.79 | 118.62 |
| மொத்தம் | 118 | 15,340 | 107.05 | 13,917 | 1,494.41 | 7.33 | 1,093.30 | 7.90 | 1,177.32 |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 10,394 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 79.95 மில்லியனில் ரூபா 1,058.70 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 7.11 மில்லியன் மாத்திரம் செயற்திட்ட உடன்படிக்கைகளில் பட்டியலிடப்பட்ட செயற்பாடுகளின் 60 மாதங்களில், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடுகளின் 31 மாதங்கள் கடந்த பின்னர் பயன்படுத்தப்பட்டிருந்தது.

மேலும், செயற்திட்டத்தின் முழுக் காலப்பகுதியையும் மேவுகின்ற பொறுப்புக்களுடன் நிதி மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுகின்ற பட்டியலிடப்பட்ட காலப்பகுதிக்குள் ஒதுக்கப்பட்ட வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டத்தின் நோக்கங்கள் அடைதலை உறுதிப்படுத்துவதற்கு விரிவான திட்டமொன்று இன்மை காரணமாக குறித்த செயற்திட்ட காலப்பகுதிக்குள் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் ஐயத்திற்கிடமாகவுள்ளது என அவதானிக்கப்பட்டது.

## 3.2 பௌதீக முன்னேற்றம்

செயற்திட்டத்தால் சமர்ப்பிக்கப்பட்ட செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 3.66 சதவீதமாக இருந்தது. மேலும், 13 ஒப்பந்தங்களில், வழங்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்ட 07 ஒப்பந்தங்கள் 2016 திசெம்பர் 31 வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2019 யூன் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமெனப் பட்டியலிப்பட்டுள்ள போதிலும் மேற்கு மாகாண கொழும்பு நகரத்திற்கான வழங்ப்பட்ட வருமானமற்ற தண்ணீரிற்கான முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தங்களின் பூர்த்தியாக்கல் திகதி செயற்திட்டக் காலப்பகுதி பின்னால் 2021 மார்ச் 31 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கொழும்பு நகரத்தின் மேற்கு பகுதி முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்தத்திற்கான கேள்வி கோரலிற்கான விளம்பரம் 2014 திசெம்பர் 01 இல் செய்யப்பட்டிருந்ததுடன் உரிய ஒப்பந்தம் 22 மாதங்கள் கடந்த பின்னர் 2016 ஒக்தோபர் 20 இல் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 வரையும் தொடங்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கொழும்பு நகரத்தின் தெற்குப் பகுதியில் முறைமை புனரமைப்பிற்கான ஒப்பந்த வடிவமைப்பு மற்றும் கட்டியொழுப்புதலிற்கான கேள்வி ஆவணம் 2014 மார்ச் 20 இல் நியம அமைச்சரவை நியமன கொள்வனவு குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன் ஒப்பந்தம் அனுமதி பெறப்பட்ட திகதியிலிருந்து 34 மாதங்கள் கடந்த பின்னர் 2017 சனவரி 26 இலேயே வழங்கப்பட்டிருந்தது.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டல் 5.3.14 (அ) இன் பிரகாரம், சகல எதிபார்க்கும் கேள்வியாளர்களும் ஒரே தகவல்களை வழங்கப்பட வேண்டியதுடன் மேலதிக தகவல்களை பெறுவதற்கு சமமான வாய்ப்புக்களை உறுதியக்க வேண்டும். குறைவான கேள்வி சமர்ப்பிக்கப்பட்ட கேள்வியாளர்கள் அளவீட்டு பட்டியல்களின் பல விடயங்கள் பின்னர் மாற்றங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், முன்னர் வெளியிடப்பட்ட அளவீட்டு பட்டியல்களின் விடயங்கள் அவருடைய விலைகள் கோரப்பட்டிருந்த முறைப்படி சகல கேள்வியாளர்களிற்கும் உரிய தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்ததாவென கணக்காய்வில் ஐயத்திற்கிடமாகவுள்ளது.

## 3.4 நிதிக் கட்டுப்பாட்டு விடயங்கள்

நிதிப்பிரமாணம் 133 மற்றும் 2010 யூலையின் 05 ஆம் இலக்க முகாமைத்தவ கணக்காய்வு சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம், செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவால் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டுமென வேண்டப்பட்டது. எவ்வாறாயினும், செயற்திட்டத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் கணக்காய்வு மீதான உள்ளக கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.